**வெஸ்ற் கோஸ்ற் பவர் (பிறைவேட்) லிமிட்டட் - 2021/2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வெஸ்ற் கோஸ்ற் பவர் (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் உதவி கணக்காளர் உட்பட மூன்று ஊழியர்களுக்கான வருடாந்த மிகையூதியக் கொடுப்பனவு. | 1,333,000 | சபை அங்கீகாரம் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் | வழக்கமொன்றாக WCPL கடந்த காலத்தில் செயலாற்றல் அடிப்படையிலான மிகையூதியத் திட்டத்தைப் பின்பற்றுகிறது. ஒரு வருடத்திற்கு ஒருமுறை CEO கம்பனியின் பதவியணி உறுப்பினர்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்து செலுத்த வேண்டிய மிகையூதியத்தை தீர்மானிக்கின்றார். | ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மின்சார சபையிடமிருந்து (CEB) ரூபா 19,457,255,454 தொகையான பெறவேண்டியவைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. | CEB தீர்ப்பனவு ஆண்டின் போது மிகவும் மோசமாக உள்ளது. கம்பனி பலமுறை CEB க்கு இதைத் தெரிவித்ததுடன் கட்டண மாற்றத்திற்குப் பின்னர் CEB அவர்களின் தீர்ப்பனவை மேம்படுத்தும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். | பெறவேண்டியவைகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் தொடர்பான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான செயற்பாட்டு கையேடு. | | | |
| செயற்பாட்டு கையேடு (அ) 3.1 ஆம் பிரிவு | அனைத்து அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் தங்கள் பதவியணியினர் மற்றும் சம்பளத்திற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற வேண்டும். கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | இந்த கம்பனி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை சொந்தமாக்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஒற்றை நோக்க கம்பனியாகும். CEB உடன் கைச்சாத்திடப்பட்ட PPA (மின்சார கொள்வனவு உடன்படிக்கை) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் மின் உற்பத்தி நிலையத்தின் முழுச் செயற்பாடும் ஒரு ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, கம்பனிக்கு CEO, கணக்காளர் மற்றும் உதவிக் கணக்காளர் ஆகியோர் மாத்திரமே ஊழியர்கபளாக உள்ளனர். அவர்களின் சம்பளம் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கம்பனியின் பாதீட்டு கட்டுப்பாட்டு செயன்முறையின் பிரகாரம் சபையால் அங்கீகரிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புக்களோ அல்லது பதவி விலகல்களோ காணப்படவில்லை. மனித வள முகாமைத்துவத்துக்கான ஒரு பகுதியை உள்ளடக்கிய சபை அங்கீகரித்த செயற்பாட்டு கையேட்டை கம்பனி கொண்டுள்ளது. | |
| (ஆ) | 3.2 (i) ஆம் பிரிவு | ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | இந்த கம்பனி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை சொந்தமாக்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு தனியான நோக்க கம்பனியாகும். இந்த கம்பனிக்கு இந்த சுற்றறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு திட்டத்தை தயாரிப்பது நடைமுறைக்கு மாறானதாகும். | -மேற்படி- |
| (இ) | 6.2 ஆம் பிரிவு | கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் ரூபா 30 பில்லியன் நிலையான வருமானத்தை கொண்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் (SOEs) சபைகள் பணிப்பாளர் சபையால் நிறுவப்பட்ட முதலீட்டுக் கொள்கைக்கு ஏற்ப முதலீட்டுக் குழுவொன்றை (IC) நிறுவ வேண்டும். கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | நிலையான வைப்பாக வங்கியில் முதலீடு செய்யப்படும் மேலதிக நிதி முதலீடுகளுக்கு பணிப்பாளர் சபையிடமிருந்து முகாமைத்துவம் அங்கீகாரத்தை பெற்றது. | -மேற்படி- |
| (ஈ) | 7.5 ஆம் பிரிவு | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை வரிசை அமைச்சு மற்றும் பொதுதிறைசேரிக்கு தேவையான வடிவங்களில் அனுப்புதல் வேண்டும். கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | பொது திறைசேரி கம்பனியில் எந்த நிதியையும் முதலீடு செய்திருக்கவில்லை, மேலும் அதன் முதலீடு முழுவதுமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடனின் மூலம் மின் உற்பத்தி நிலையத்திற்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. இத்தகவல் முகாமைத்துவத்தால் சபைக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 18,811,281,941 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 15,574,865,319 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 3,236,416,622 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பெறவேண்டிய வெளிநாட்டு நாணயம் மீதான நாணயமாற்று இலாபம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வருமானம் 16 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதே சமயம், விற்பனைக் கிரயம் 24 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் மீளாய்வாண்டிற்கான மொத்தலாபம் 2 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

(ஆ) கம்பனியின் நிதி வருமானம் 116 சதவீதத்தாலும், கம்பனியின் நிதிக் கிரயம் 3 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாப விகிதம் 37 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரை அதிகரித்துள்ளதுடன் தேறிய இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 35 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உரிமை மீதான திரும்பல் 21 சதவீதத்தில் இருந்து 23 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின் உற்பத்தி தொடர்பான மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் வழங்கப்பட்ட மாதாந்த விலைப்பட்டியல்கள் இலங்கை மின்சார சபையால் (CEB) மதிப்பாய்வு செய்யப்பட்டன, மேலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் CEB ஏற்றுக்கொண்ட தொகை விலைப்பட்டியல் தொகையை விட குறைவாக இருந்தது. வேறுபாட்டிற்கு தாக்கமளித்த காரணங்களை வழங்காமல், இணங்கப்பட்ட தொகையை CEB உறுதிப்படுத்தியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த | WCPL மற்றும் CEB ஆகியவற்றுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் 8.10.2 ஆம் பிரிவின் பிரகாரம் "CEB இடமிருந்தான ஏதேனும் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தொகையிலும் சர்ச்சைகள் ஏற்பட்டால், அத்தகைய விலைப்பட்டியல் கிடைத்து ஏழு நாட்களுக்குள், ஏனைய தரப்பினருக்கு அறிவித்தல் வழங்கி அதற்கான உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் அந்த விலைப்பட்டியலில் உள்ள சர்ச்சையில்லாத ஏதேனும் தொகை செலுத்தப்பட வேண்டும்". எனினும், மாதாந்த விலைப்பட்டியலில் இருந்து ஏழு நாட்களுக்குள், சர்ச்சைகள் குறித்து CEB இடம் இருந்து WCPL எழுத்துமூல அறிவிப்பைப் பெற்றிருக்கவில்லை. CEB மூலம் கொடுப்பனவு செய்வதற்கான வங்கி | சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சர்ச்சைக்கான தீர்வை கம்பனியால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | ஆலோசனையைப் பெற்ற பின்னர் WCPL எப்பொழுதும் வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கேட்டு CEB இற்கு உத்தியோகபூர்வமாக கடிதம் எழுதியுள்ளது. 2022 யூன் 15 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில், சர்ச்சைகளைத் தீர்ப்பதில் CEB இன் கூட்டிணைப்பு இல்லாதமை தொடர்பாக திறைசேரி செயலாளருக்கு அறிவிப்பதற்கு சபை தீர்மானித்தது. மேலும் சபை எப்பொழுதும் அனைத்து சர்ச்சைக்குரிய தொகைகளுக்கும் 50% நட்டக்கழிவை வழங்கியிருந்தது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 மூலோபாயத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் தொடர்பான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை அதன் மூலோபாயத் திட்டத்தை ஒரு தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் அதன் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இறுதி செய்யப்பட்ட மூலோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்துடன் தொடர்புடைய வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி மேற்படி தேவைப்பாடுகளுடன் இணங்கத் தவறியிருந்தது. | பொது திறைசேரி கம்பனியில் எந்த நிதியையும் முதலீடு செய்திருக்கவில்லை, மேலும் அதன் முதலீடு முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடனின் மூலம் மின் உற்பத்தி நிலையத்திற்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. இத்தகவல் முகாமைத்துவத்தால் சபைக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது. | தொடர்புடைய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 4.4 ஆம் பிரிவு அனைத்து அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் கணக்காய்வுக் குழு மூலம் சபைக்கு மாத்திரமே அறிக்கை அளிக்கும் IAs (உள்ளக கணக்காய்வாளர்கள்) ஐ கொண்டிருக்க வேண்டும். அதே வழிகாட்டலில் உள்ள 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்பார்வை செயற்பாட்டை எளிதாக்குவதில் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வுக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. கணக்காய்வுக் குழுவில் சபையின் 3 நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் அல்லது 1/3 நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் இவற்றில் அதிகமானது இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு உறுப்பினராவது நிதி முகாமைத்துவத்தில் அறிவும் தகைமைகளும் பெற்றிருக்க வேண்டும், அத்தகைய உறுப்பினர் கணக்காய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுகிறார். பணிப்பாளர் சபை திறைசேரி பிரதிநிதி ஒருவரைக் கொண்டிருக்கும் போதெல்லாம், அத்தகைய உறுப்பினர் கணக்காய்வுக் குழுவில் நியமிக்கப்பட வேண்டும். கம்பனி மேற்படி தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. | நியதிச்சட்ட கணக்காய்வு இந்த நடைமுறைகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களுக்கு இணங்குவதற்கான கணக்காய்வை உள்ளடக்குகிறது. கம்பனியின் முழு பதவியணியினரும் 3 நபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் CPC, கெமிக்கல்ஸ் ஆகியவற்றிலிருந்து எரிபொருளை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கும், வருடாந்த நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கும் மாத்திரமே கம்பனி பொறுப்பாகும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்படுத்துவதில் பங்களிப்பு செய்ய வேண்டும். எனினும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள | கம்பனி 300 மெகாவாட்ஸ் கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தை சொந்தமாக வைத்து நடாத்துகிறது. அது மாத்திரமே கம்பனியின் செயற்பாடு ஆகும். அதன் கொடுக்கல்வாங்கல்கள் CPC இற்கு எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், உபகரணங்கள் வழங்குநரால் பரிந்துரைக்கப்பட்டவாறு சில இரசாயனங்ளை கொள்வனவு செய்தல் மற்றும் சபையால் அங்கீகரிக்கப்பட்ட O&M ஒப்பந்தத்தின் முகாமைத்துவம் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல்’’ இன் தேவைப்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். |

இடைவெளிகள் மற்றும் செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

ஆகியவற்றுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பின்பற்றப்படும் நடைமுறைகள் உள்ளன. நடைமுறைகள் சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன. மின் உற்பத்தி நிலைய உட்கட்டமைப்பில் ஏதேனும் முன்னேற்றத்திற்கான மூலதன பாதீடும் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.